2024 பிப்ரவரி 21]
36—

நினைவு மண்டபம்

***103693—திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:** *மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காஞ்சியை ஆண்ட போதி தர்மர் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சியை ஆண்ட பல்லவ இளவரசர் போதி தர்மர் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்கக் கோரும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.*

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மிகப் பழமையான அழியா நகர் மட்டுமல்ல, தமிழ்நாட்டின் தத்துவ மரபில் தனிச் சிறப்பு பெற்ற இடமாகும். உலகெங்கும் இருந்து தத்துவவாதிகளை ஈர்த்தது மட்டுமன்றி, உலகிற்குப் பல அறிஞர்களை தந்தது மட்டுமின்றி, உலகம் முழுவதும் மனித வாழ்வின் மேன்மைக்கு வழிகாட்டுதலைத் தந்த மண்ணாக, இந்த மண் விளங்குகிறது. இங்கே பௌத்தம், சமணம், சைவம், வைணவம் என பல சமயங்கள் வளரவும், அவற்றை வளப்படுத்தவும், முக்கியமாக 1,300 ஆண்டுகளுக்கு முன்பே பல்கலைக்கழகம் அமைத்து, பல நாடுகளின் மாணவர்களுக்கு பல்லாயிரக்காணவர்களுக்கு தத்துவக் கல்வியைப் பயிற்றுவித்த மண், இந்த மண். காஞ்சி மண்ணை ஆண்ட பல்லவ மன்னன் சிம்மவர்மனின் மூன்றாவது மகனான போதி தர்மர் அவர்கள், அரச குடும்பத்திலே பிறந்தவர் என்றாலும், பௌத்த மடாலயத்தில் சிறந்த தத்துவஞானியாக விளங்கியிருக்கிறார். கீழ்திசை நாடுகளில், பௌத்தம் பரவ வேண்டுமென்பதற்காக கொடும்பிணி*

[2024 பிப்ரவரி 21

தீர்க்கும் மருத்துவ அறிவு படைத்தவராக விளங்கியிருக்கிறார். சீனப் பயணத்திற்குச் சென்றபோது அவர் ஏற்படுத்திய அந்த மாற்றங்கள், உருவாக்கிய Shaolin Monastery–ஷாலின் மடாலயம் 16 நூற்றாண்டுகளாய் முக்கியம் வாய்ந்த உலகத்தின் பிரசித்தி பெற்ற ஒரு பௌத்த மடாலயமாக இன்றும் இயங்கிக்கொண்டிருக்கிறது. இன்றைக்கு மதவாதம், மனித நோயாக மாறி வருகிற இந்தச் சூழலில் மனிதனின் ஆன்ம பலம் வளர தத்துவ சிந்தனைகளை விதைத்தவர் அவர். இப்படிப்பட்ட, சிறந்தவரான போதி தர்மரினுடைய தத்துவங்கள், அவருடைய மருத்துவ அறிவாற்றல் ஆகியவற்றை உலகமே போற்றுகிற நிலையில் இருக்கிற சூழலில், இங்கே காஞ்சிக்கு உலகம் சார்ந்த பௌத்த அறிஞர்கள் அதிகளவில் வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னொரு கேள்வி இருக்கிறது.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: அவர்கள் வருகிற நேரங்களில் ஒவ்வோர் ஆண்டும் விழாக்கள் அங்கே கொண்டாடப்படுகின்றன. எனவே, போதி தர்மரின் போதனைகள் பற்றிய விவரங்கள் அடங்கிய ஒரு பெரும் மணிமண்டபம் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றதிலிருந்து பெரும்பாலும் மணிமண்டபங்களோ, நினைவு மண்டபங்களோ அமைப்பதில்லை. அதற்குப் பதிலாக அரங்கமாக அமைக்கப்பட்டு, அது அரசினுடைய விழாக்களை நடத்துவதற்கும், பொது மக்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப சுப நிகழ்ச்சிகளை நடத்துவதற்குமாக இன்றைக்கு அமைக்கப்பட்டு வருகிறது. எனவே, அந்தவகையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போதி தர்மரைப் பற்றி மிக விளக்கமாக இங்கே எடுத்துச் சொல்லியிருந்தார். ஏற்கெனவே இதுகுறித்து இந்த அவையில் அவர் ஒருமுறை குறிப்பிட்டிருக்கிறார். மேலும், அவர் இதுகுறித்து கடிதமாக வழங்குகிறபட்சத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, நிதிநிலைக்கேற்ப இந்தத் துறை பரிசீலிக்கும்.

2024 பிப்ரவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.*

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஒட்டுமொத்த இந்தியாவிலேயே, மிகச் சிறந்த திட்டத்தில் ஒன்றாக, பயிலுகின்ற மாணவர்கள் பசியோடு இருக்கக் கூடாது என்பதற்காக, ஈரமில்லாத மண்ணில் பயிர் வளர்வது எப்படி, பட்டினியால் வாடும் மாணாக்கர்களுக்கு கல்வி அறிவு வளர்வது எப்படி என்கிற நோக்கத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காலை உணவுத் திட்டம் என்ற திட்டத்தைக் கொண்டுவந்து, முன்மாதிரி திட்டமாக உருவாக்கியிருக்கிறார். இதுதான் இனி வரலாற்றில் முதன்மையானதாய் விளங்கும். அந்த வகையில் முதன்முதலில் நீதிக் கட்சியினால் தொடங்கப்பட்ட பகல் உணவுத் திட்டம், சென்னை மாகாண அளவில் கொண்டுவரப்பட்ட அந்தத் திட்டம், பின்னர் மதிய உணவுத் திட்டம் என்று பெருந்தலைவர் காமராசர் ஆட்சியின்போது கொண்டுவருவதற்குப் பெருந்துணையாக விளங்கியவர் யார் என்று சொன்னால், காஞ்சிபுரம் அருகில் இருக்கக்கூடிய நெய்யாடிவாக்கத்தைச் சேர்ந்த சாரதாம்பாள் துரைசாமி அவர்களுடைய மகனான திரு. நெது. சுந்தரவடிவேலு என்கிற பொது கல்வி இயக்குநர் அவர்கள். அவருடைய பெயரிலேயே அந்தத் திட்டம் வழங்கப்பட்ட காலங்கள் உண்டு. தந்தை பெரியார் அவர்களுடைய சுயமரியாதை மாநாட்டில் கலந்துகொண்டு, அவருடைய மாணவன் என்ற உணர்வோடு அந்தத் திட்டத்தைப் பெருந்தலைவர் காமராசரோடு சேர்ந்து கொண்டு வந்து அதை நிறைவேற்றியிருக்கிறேன் என்று சொன்னவர். அந்த வகையில் அவருடைய நூற்றாண்டு இந்த ஆண்டு வருகிறது. எனவே, நெய்யாடிவாக்கத்தில் அவருடைய ஊரிலேயே, அவருக்குச் சிலை அமைத்துத் தருவதற்கு அரசு முன்வருமா என்பதை இந்த நேரத்தில் கேட்டு, அமர்கிறேன்.*

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்*

குறிப்பிட்டிருக்கின்ற இந்த வினாவைக் குறித்து ஆராய்ந்து, துறை நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள்.*

திரு. க. சுந்தர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நம்முடைய காஞ்சித் தலைவனுக்கு மணிமண்டபம் அமைப்பது சம்பந்தமான கேள்வி. இதுகுறித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது மணிமண்டபங்கள் அமைப்பதற்கில்லை, திறந்தவெளி அரங்கங்கள் அமைப்பதாகக் குறிப்பிட்டார்கள். 2 நாட்களுக்கு முன்பு, சட்டமன்றத்திலே வழங்கப்பட்ட நிதிநிலை அறிக்கையிலே நதிகள் சீரமைக்கப்பட்டு, தூய்மையாகப் பராமரிக்கவும், கரையோரம் பசுமையான மரங்களுடன்கூடிய பூங்காக்கள், திறந்தவெளி அரங்கம் அமைப்பதில் பாலாறு விடுபட்டு போய்விட்டது. அந்தப் பாலாறு பகுதியில் பேரறிஞர் அண்ணா அவர்கள் தொடர்ந்து தன்னுடைய கற்பனைச் சிறகை விரித்தவர். எனவே, அவருக்கு அங்கு சுற்றுலாப் பயணிகள் வந்து செல்ல திறந்தவெளி அரங்கம் அமைத்து, சிலை அமைப்பதோடு, காஞ்சிபுரம் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் குறிப்பிட்டதுபோல மதிய உணவு திட்டத்திற்கு வித்திட்ட திரு. நெது. சுந்தரவடிவேலு அவர்களின் 112-வது பிறந்தநாள் விழா. அந்த விழாவிலே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதுதான் அவர்கள் கேட்டார்கள்.*

திரு. க. சுந்தர்: *அந்த அறக்கட்டளைமூலம் சிலை அமைத்து, நெய்யாடிவாக்கம் மேல்நிலைப் பள்ளியில் தயாராக வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்* video conferencing *மூலம் திறந்துவைக்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்தையும் ஆராய்ந்து, பரிசீலித்து அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள அரசு முன்வரும்.*

2024 பிப்ரவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.*

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தனித்தமிழ் இயக்கம் பிறமொழி வெறுப்பினால் உருவானது அல்ல. பிறமொழி கலப்பை எதிர்த்து உருவானது" என்று சொல்லி இயக்கம் கண்ட தமிழறிஞர் மறைமலை அடிகள் அவர்கள் நாகப்பட்டினம், காடம்பாடியில் பிறந்தவர். அவரது நினைவாக நாகப்பட்டினத்தில் கலையரங்கம் கட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

அதேபோல இந்த ஆண்டு 'கல்லக்குடி கண்ட கருணாநிதி வாழ்கவே' என்ற புகழ்பெற்ற பாடலை இயற்றிய கவிஞர் திலகம் சாரண பாஸ்கரன் அவர்களின் நூற்றாண்டு. அதேபோல, பேரறிஞர் அண்ணாவை அழைத்து, கல்லூரியில் நிகழ்ச்சி நடத்தியதற்காக அரசுக் கல்லூரிப் பணியிலிருந்து அன்றைக்கு விலக நேர்ந்த இறையருட்கவிமணி அப்துல்கபூர் அவர்களுக்கும் நூற்றாண்டு. அவர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்படுமா என்பது குறித்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கருத்துகளை துறை பரிசீலிக்கும். அதேநேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடிதமாகவும் இதுகுறித்து துறைக்கு அனுப்பி வைத்தால் நிச்சயமாக ஆய்வு செய்யப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழறிஞர்களைப் போற்றுகின்ற நம்முடைய திராவிட மாடல் அரசு, திருவையாறு தொகுதி, நடுக்காவிரியில் வாழ்ந்து மறைந்த தமிழறிஞர் திரு. நா.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களுக்கு நினைவு மண்டபமும், அதில் நூலகமும் அமைக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட கருத்துகளை துறை பரிசீலிக்கும். அதேநேரத்தில் எதிர்காலத்தில் நிதிநிலைமைக்கேற்ப அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து அவர்கள்.

திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலைப் போராட்ட வீரர் திரு. சீனிவாசராவ் அவர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக் காலத்தில்தான் மணிமண்டபம் அமைக்கப்பட்டது. அந்த மணிமண்டபம் பல ஆண்டுகளாகப் பராமரிப்பு இல்லாமல் இருக்கிறது. எனவே, அதை பராமரித்துத் தருவதற்கு அரசு முன்வருமா என்பதைக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறை ஆய்வு செய்து, இந்த ஆண்டு, அந்த மணிமண்டபத்தை பராமரிப்புக்கு எடுத்துக்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நிச்சயமாக எடுத்துச்செல்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி அவர்கள்.

திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துப்பாக்கி கவுண்டர் என்ற திரு. உதயபெருமாள் கவுண்டர், இந்திய விடுதலைப் போராட்ட வீரர். அவருடைய வாரிசுகள் என்னுடைய மானாமதுரை தொகுதி திருப்பாச்சியில் வாழ்ந்து வருகிறார்கள். துப்பாக்கி கவுண்டர் அவர்களின் வீரத்தைப் போற்றுகின்ற வகையில், அவருக்கு திருவுருவச் சிலையும், மணிமண்டபமும் அமைத்துத் தர கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் சிவகங்கை திரு. மு. இராசேந்திரன் என்பவர் 1947 முதல் 1965 ஆம் ஆண்டு வரை வாழ்ந்தவர், இந்திய நடுவணரசு, இந்தி மட்டுமே ஆட்சிமொழி எனும் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று தெரிவித்தபோது அலுவல் சட்டம் 1963–ஐ எதிர்த்துப் போராடி துப்பாக்கிச்சூட்டில் பலியான சிவகங்கை, திரு. மு. இராசேந்திரன் அவர்களுடைய புகழைப் போற்றிடும் வகையிலும், வணங்கிடும் வகையிலும் அவரது திருவுருவச்

2024 பிப்ரவரி 21]

சிலையை அமைத்து தர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேற்றுதான் அதுகுறித்து கடிதம் தந்திருக்கிறார்கள். அது துறையின் பரிசீலனையில் இருக்கிறது. இதுகுறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

37—

ஜமுனாபாரி வெள்ளாட்டினம்

***96012—திரு. தா. உதயசூரியன்:** *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சின்ன சேலம் ஆட்டுப்பண்ணையில் ஜமுனாபாரி வெள்ளாட்டினம் வளர்க்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சங்கராபுரம் தொகுதி, சின்ன சேலம் ஆட்டுப்பண்ணையில் ஜமுனாபாரி ஆடுகள் வளர்க்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.*